பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 01 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரான்சுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாகப் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** நாட்டில் கடந்த **11** ஆண்டுகளில் கல்வித் துறையில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம், கிராமப் புற வளர்ச்சியை உறுதி செய்யும் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**4.** முன்னாள் ராணுவத்தினர் தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுவதையொட்டி புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

**5.** மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி **7** விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரான்சுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனில் ஆலோசகர் திரு. இம்மானுவேல் போன் பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் நேற்று சந்தித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவும்-பிரான்சும் ஏற்கனவே பல்வேறு துறைகளில் நெருக்கமாக பணியாற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த சந்திப்பு அமைந்திருந்ததாக அவர் கூறியுள்ளார்.

புதுமைக் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், கல்வி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து திரு. இம்மானுவேல் போனுடன் ஆலோசனை நடத்தியதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் விரைவில் இந்தியா வருவதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த **11** ஆண்டுகளில் கல்வித் துறையில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் ஆனந்த்-ல் கல்வி நிறுவனம் ஒன்றில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் உரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை **2047**ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் கல்வித்துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

**2014**ஆம் ஆண்டில் நாட்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை **38** ஆயிரமாக இருந்தது என்றும், தற்போது அது **53** ஆயிரமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**11** ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை **760**ஆக இருந்தது என்றும், தற்போது அது ஆயிரத்து **391**ஆக உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை **387**-ல் இருந்து தற்போது **818**ஆக அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

தொலைநோக்கு சிந்தனையுடன் ஒவ்வொரு துறையிலும் கவனம் செலுத்தப்பட்டு தனித்துவத்துடன் கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதகா அவர் தெரிவித்தார்.

நாட்டிலேயே முதன் முதலாக குஜராத்தில் தொடங்கப்பட்ட கூட்டுறவு பல்கலைக்கழகம், கூட்டுறவுத்துறையை வலுப்படுத்தும் என்று திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம், கிராமப் புற வளர்ச்சியை உறுதி செய்யும் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

அகமதாபாதில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் முறைகேடுகள் அதிக அளவில் நடைபெற்றதாக கூறினார்.

புதிய திட்டத்தில் அவை களையப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன் 100 நாட்களுக்குப் பதிலாக 125 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய திட்டத்தில் முறைகேடுகள் தடுக்கப்பட்டு கிராமப்புறங்கள் விரைவான முன்னேற்றத்தை அடையும் என்று அவர் கூறினார்.

இதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேவையின்றி இதனை குறைகூறி வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

முன்னாள் ராணுவத்தினர் தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் முதல் ராணுவ தலைமைத் தளபதி ஃபீல்டு மார்ஷல் கரியப்பா ஓய்வு பெற்ற தினத்தை குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14ஆம் தேதி முன்னாள் ராணுவத்தினர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

முன்னாள் ராணுவ வீரர்கள் தினத்தையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில், முன்னாள் ராணுவத்தினரின் பேரணிகள், முன்னாள் படை வீரர்களுக்கான மருத்துவ முகாம்கள், குறைதீர்ப்பு கூட்டங்கள் போன்றவை நடைபெற உள்ளன.

பாதுகாப்புத் துறை, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் வங்கிகளின் சார்பில் முன்னாள் ராணுவத்தினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உதவும் வகையில் சிறப்பு முகாம்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவும், தென்னாப்பிரிக்காவும் வரலாற்றுச் சிறப்புமிக்க நட்புறவைக் கொண்டுள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நாளை மறுநாள் தொடங்கவுள்ள காமன்வெல்த் அவைத்தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க இந்தியா வந்துள்ள தென்னாப்பிரிக்க குழுவினர் திரு. ஓம்பிர்லாவை நேற்று சந்தித்தனர்.

அப்போது பேசிய திரு. ஓம் பிர்லா, மகாத்மா காந்தி மற்றும் நெல்சன் மண்டேலாவின் கொள்கைகள், இரு நாடுகளையும் ஒரே புள்ளியில் இணைப்பதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளும் நாடாளுமன்ற நடைமுறைகளை பகிர்ந்துகொண்டு அதிக ஒத்துழைப்புடன் தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்று திரு. ஓம் பிர்லா கூறினார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோவுடன் தொலைபேசியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று சமூக வலைதளத்தில் திரு. ஜெங்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், அணுசக்தி, பாதுகாப்பு, எரிசக்தி, முக்கிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அமெரிக்க அமைச்சருடன் ஆலோசனை மேற்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொள்ள இருதரப்பும் ஒப்புக்கொண்டதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் புதிய அம்ரித் பாரத் ரயில்கள் விரைவில் இயக்கப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நியூஜல்பைகுரி - நாகர்கோவில், நியூஜல்பைகுரி - திருச்சி, கொல்கத்தா - தாம்பரம் உள்ளிட்ட 9 வழித்தடங்களில் இந்த ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்குவங்கம், அசாம், மகாராஷ்டிரா, கர்நாடகா, பிஹார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களை இணைக்கும் வகையில் இந்த ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த ரயில்கள் பல்வேறு மாநிலங்கள் வழியே இயக்கப்படுவதால் அப்பகுதிகளில் போக்குவரத்து இணைப்பு வலுவடையும் என்று ரயில்வே கூறியுள்ளது.

தற்போது 30 அம்ரித் பாரத் விரைவு ரயில்கள் செயல்பாட்டில் உள்ளதாக ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ரயில்வே துறையின் ரயில் ஒன் செயலியின் மூலம் முன்பதிவு இல்லாத பயணச் சீட்டை பதிவு செய்பவர்களுக்கு 3 சதவீத தள்ளுபடி வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

இந்தச் சலுகை இன்று அமலுக்கு வருவதாகவும் இது ஜூலை 14ஆம் தேதி வரை என அமலில் இருக்கும் என்றும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இளம் படைப்பாளர்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகமும் மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகமும் நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய புத்தாக்க படைப்பாளர்களுக்கான திறன்

மேம்பாட்டுத் திட்டத்தின் நிறைவு விழா நிகழ்ச்சி புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், இந்தியாவின் கதை சொல்லும் பாரம்பரியம் செழுமையானது என்று கூறினார்.

நமது படைப்பாளிகள் தங்களது கதைகளை உலகளாவிய தளங்களுக்கு கொண்டு செல்லும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தந்துள்ளதாக அவர் கூறினார்.

உலகின் படப்பிடிப்புத் தளமாக இந்தியா மாறி வருவதாக அவர் தெரிவித்தார்.

உலகிற்காக இந்தியாவில் படைப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறைச் செயலாளர் திரு சஞ்சய் ஜாஜு பேசுகையில், செயற்கை நுண்ணறிவின் இந்த சகாப்தத்தில் படைப்பாற்றலுடன் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று கூறினார்.

<<<<>>>>

கேரள மாநிலம் சபரி மலையில் மகரஜோதி தரிசனம் இன்று மாலை நடைபெறுகிறது.

பொன்னம்பலமேட்டில் தோன்றும் மகரஜோதியைக் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

இதனையொட்டி மகரஜோதியைக் காணும் இடங்கள் மற்றும் சன்னிதானத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் வரும் 26ஆம் தேதி முதல் 5 நாட்களுக்கு விவசாயிகளுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

வேளாண் துறை அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்றார்.

<<<<>>>>

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மும்பை அணி, குஜராத் அணியை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் மும்பை 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் உத்தரப்பிரதேச அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**